1987 மே 7]

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற தகவல் உண்மைச் சார்ந்ததாக இல்லை. பேச்சு வார்த்தைக்காக நான்கு முறைகள் ஏ.சி.எல் அழைத்தும் அவர்கள் வரவில்லை. பேச்சு வார்த்தைக்கு நாங்கள் வர மாட்டோம் என்று அவர்கள் தெளிவாக அறிவித்திருக்கிறார் கள். ஆகவே இன்றைக்கு வரைக்கும் பேச்சு வார்த்தை நடை பெறவில்லை. இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் நேரடியாகவே அவர்களை சென்னைக்கு அழைத்து பேச்சு வார்த்தைகளைத் தொடர இனியாவது முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சு வார்த்தை நடத்து வதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். ஆனால் அமைச்சர் அவர்கள் தான் அதைச் செய்ய வேண்டுமென்ற அவசியம் நிச்சயமாக இல்லை.

(ஆ) எண்ணூர் துரித சாலையில் புதிய மின் விளக்குகள் போடு வதில் தாமதம்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருவொற்றியூர் தொகுதியில் கத்திவாக்கம் முதல் எண்ணூர் வரையில் சுமார் 19 குப்பங்களில் எண்ணூர் நெடுஞ் சாலை முழுவதும் விளக்கு எரியாத காரணத்தினால் பல விபத்துக்கள் ஏற்படும் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

திருவொற்றியூர் நகராட்சி எல்லையில் உள்ள எண்ணூர் துரித சாலையில் புதிய மின் விளக்கு கம்பங்கள் அமைத்து விளக்கு வசதி செய்வதற்காக நகர மன்றத் தீர்மான எண். 322-ல் நாள் 22-7-1980 மற்றும் தீர்மானம் எண். 408, நாள் 18-1-82-ல் 230 புதிய மின் விளக்குகள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டு அதன் தொடர்பாக மின்சார வாரியத்திற்கு ரூ. 12,720 15-1-1982-ல் செலுத்தப்பட்டுள்ளது.

அரசு ஆணையின்படி நகராட்சி 1 + 1 அடிப்படையில் பழைய பாக்கியையும் நடப்பு மின் கட்டணத்தையும் ஒழுங்காக செலுத்தி வந்த போதிலும், மின் கட்டண பாக்கி சுமார் இரண்டு இலட்ச ரூபாய் உள்ளது. மின்சார வாரியத்திற்கு நிலுவை இருப்பதால், மின்சார வாரியத்தால் புதிதாக விளக்குகள் போட இயலவில்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையின் தலை நாயகர் அவர்களே, இந்த அறிக்கையில் நகராட்சித் தீர்மானம் 22-7-1980 அன்று போடப்பட்டு இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 13-1-1982 இல் கூட 12,220 ரூபாய் கட்டியிருப்பதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். பணம் கட்டியது 1982, இப்போது நடைபெறுவது 1987. இடைப்பட்ட காலத்திலே விளக்குகள் எரியாத காரணத்தினால் அங்கே 17 குப்பங்களிலே இருக்கிற மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு செய்திகளைச் சேகரித்துத்தருகிறார்களே தவிர, விளக்குகள் எரிவதற்கு விளக்கங்களைக் கொடுக்காமல் இருப்பது முறையா? இந்த விளக்கங்களை நானே ஆணையரிடம் சென்று கேட்டு விடலாம். விளக்கங்களைத் தெரிவிப்பதோடு நின்று விடுகிறார்களே தவிர விளக்குகள் எரிவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எரிகிற விளக்குகளுக்கு மின்சாரக் கட்டணம் கட்டாத நிலையில் புதிதாக விளக்குகள் போடுவது பொருளற்ற செயல் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆகவே மின்சார வாரியம் அந்த நிலுவையைக் கட்டியதற்குப் பிறகு அந்த வேலையை எடுத்துக் கொள்ளலாம் என்று உறுதியாகத் தெரிவித்திருக்கிறது.

திரு. ஜி. கே ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைநாயகர் அவர்களே, கட்டண நிலுவை என்று சொன்னார்கள், அவர்கள் தவணை முறையில் அதைக் கட்டிக் கொண்டு வருகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிய வேண்டும். கட்டிக் கொண்டு வருகிறபோது அது தேவையற்றது என்று எண்ணுவது விபரீதமான உணர்வாகும். விடுதலை பெற்று இருபதாம் நூற்றாண்டினை எட்டிக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே விளக்குகள் எரியாமல் அவதிப்படுகிற அந்த மக்களிடத்திலே இந்த விளக்கம் தருவது முறையல்ல. ஆகவே விளக்கு எரியச் செயவதற்கு ஆக்க பூர்வமான பணிகள் என்ன செய்ய போகிறீர்கள்? குறிப்பாக மீனவ மக்கள் ஆட்சியினுடைய அன்புக்குரியவர்கள். மேலும் தோழமைக்

கட்சியின் அன்புக்குரியவர்கள். அந்தப் பகுதிகளிலே இருக்கிற கிட்டத்தட்ட 35 ஆயிரம் மக்களுடைய வாழ்வில் விளக்கு இல்லாமல் இருப்பது முறையாகுமா? விரைவாக அதைச் செய்து ஆக்க பூர்வமான நடவடிக்கையை எடுக்க வேண்டுமே தவிர, விவரக் குறிப்பைத் தருவதில் பயன் ஒன்றும் இல்லை என்று எண்ணுகிறேன். அமைச்சர் அவர்கள் விளக்கு எரி வதற்கு ஆக்கபூர்வமான செய்திகளை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, விளக்கு எரிய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு தான் வீட்டிற்கு ஒரு விளக்குத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இங்கே பிரச் சினை விளக்கு எரிய வைக்க வேண்டியது அந்த நகராட்சி யினுடைய கடமை. அந்த நகராட்சிக் கட்டண நிலுவையை பாக்கி வைத்து இருக்கிற காரணத்தினால் மின் வாரியம் மேற் கொண்டு விளக்குகள் போடுவதை மேற்கொள்ள வில்லை கட்டணத்தைக் கட்டி விட்டால் விளக்குகள் தானாக வந்து விடும். இதற்கும் சுதந்திரத்திற்கும் ஒன்றும் சம்பந்தம் இல்லை.

(இ) காட்டுமன்னார் கோயில் ஒன்றிய ஆணையாளர் மக்கள் குறை தீர்ப்புக் கூட்டத்திற்கு வராமை :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பை திரு. சா. ஜெயச்சந்திரன் அவர்களுக்குப் பதிலாக டாக்டர் ந. மாசிலாமணி அவர்கள் மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''காட்டுமன்னார் கோயில் தொகுதியைச் சேர்ந்த கிராமங்களில் மக்கள் குறைகளை நேரடியாகக் கேட்பதற்கு காட்டுமன்னார் கோயில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரை அழைத்தும் அவர் வராதது குறித்த'' அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோயில் ஒன்றிய ஊராட்சி ஆணையாளர், ''மக்கள் குறை தீர்ப்பு கூட்டம்'' தொடர்பாக, சட்ட மன்ற உறுப்பினர் தனக்கு வாய் மூலமாகவோ